1971 டிசம்பர் 18]

அரூருக்கு வடக்கே மதிகெட்டான் கால்வாய்

* 575 வினா—டாக்டர் ச. அ. சின்னராசு : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டத்தில். அரூருக்கு வடக்கே தென்பெண்ணை யாற்றிலிருந்து "மதிகெட்டான் கால்வாய்" கொண்டு வர திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ச. அ. சின்னராசு : தலைவரவர்களே, அரூருக்கு வடக்கே இருக்கிற பகுதி மிகவும் வறட்சியடைந்திருப்பதால் அந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்த மதிகெட்டான் கால்வாய் திட்டத்தைப்பற்றி ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டு விட்டது. அதற்கு 11 லட்சம் ரூபாய் ஆகும். அது அன்—எக்கனமிக்கல்' என்று கருதி கைவிடப்பட்டது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்த மதிகெட்டான் கால்வாய் என்ற பெயரை மாற்றியமைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இப்போது பெயரை மாற்றுவது என்பது சரியாகாது.

THIRU B. VENKATASWAMI : In certain areas the Government says that there is some yardstick regarding backward areas. If the yardstick is going to be applied, surely backward areas cannot be developed and come forward. Will the Government therefore avoid applying the yardstick in case of backward taluks and areas?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, பின்தங்கிய பகுதிகளுக்கு என்றிருக்கிற விதிமுறைகளின் அடிப்படையிலும் பரிசீலனை செய்யப்பட்டது.

'The proposal for renovation and completion of 'மதிகெட்டான் கால்வாய்' which is reported to be completed for about 50 years and whose estimate was Rs. 11 lakhs was dropped since it was considered uneconomical.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இது மதி கெட்டான் கால்வாயா அல்லது மதிகேட்டான் கால்வாயா என்று தெரியவில்லை. ஏனென்றால், சில, ஆங்கிலச் சொற்களைத் தமிழில்

சொல்லும்போது இதுபோன்ற மாறுபாடுகள் ஏற்படுவதுண்டு. ஆயினும் இந்த இரண்டு பெயரும் பொருத்தமாக இல்லை, நன்றாகவும் இல்லை. ஆகையால் அரசாங்கம் மாற்றியமைக்க வேண்டும்; மாற்றியமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கெனவே இருக்கும் பெயரை மாற்றுவது பொருத்தமுடையதாக இருக்காது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொருத்தமாக இருக்காது என்று கருதுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பெயரை 'மதிகெட்டான்' என்று இருப்பதை மாற்றி அமைத்துவிடலாம். அதற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

தொப்பையாறு அணைக்கட்டுத் திட்டம்

*576 வினா—திரு. எம். பரமசிவம்: மாண்புமிகு பொதுபணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தொப்பையாறு அணைக்கட்டும் திட்டம் எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தொப்பையாறு அணைக்கட்டுத் திட்ட அமைப்பும் மதிப்பீடும், திருச்சிராப்பள்ளி ஆய்வு மேற்பார்வைப் பொறியாளரால் மறுஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. திட்டம் முடிவாகப் பரிசீலிக்கப்பட்டதும் முழுக் குறிப்புகள் தெரியவரும்.

பல்லடம் சாலை, ஈஸ்வரன் கோயில் சாலை சந்திப்பு

* 577 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருப்பூர் நகரில் உள்ள பிரதான சாலையான பல்லடம் ரோடும், ஈஸ்வரன் கோயில் சாலையும் சந்திக்கும் இடத்தில் சாலையை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அந்தப் பாதை மிகக் குறுகலாக இருப்பதன் காரணமாகப் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. எனவே, அதை அகலப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற சாலை இப்போது 42 அடி அகலம் இருக்கிறது. சாலைக்கு இருபக்கங்களிலும் கட்டடங்கள் இருப்பதால் மேற்கொண்டு விஸ்தரிப்பதற்கு வாய்ப்பில்லை என்று கூறிக் கொள்கிறேன்.